**Minutes of the Public Hearing conducted for the M/s. S.Rathinam Rough Stone Quarry, S.F.No. 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2J, 2K & 2L,of Kallanai Village, Kallikudi Taluk, Madurai District held on 25/01/2024 at 11.00AM at M/s. Pothu Vinayaga Mahal, Ulagani, Kallikudi Taluk, Madurai District.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M.Shanthi | : | Revenue Divisional Officer,<br>Thirumangalam,<br>Madurai District. |
| 2 | Dr.R.Gunasekaran | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Madurai District |
| 3 | M.Devakirubai | : | Assistant Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Madurai District |
| 4 | C. Jesus Sivasankar | : | Assistant Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Madurai District |
| 5 | Project Proponent and public | : | As per Attendance Register<br>(Copy of Register is enclosed) |

**District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai**

The District Environmental Engineer cordially welcomed the Revenue Divisional Officer, Madurai who presided over the public hearing conducted on that day.

He also welcomed the Revenue Department officials, Police Department officials, Press people, Social Activists, proprietor of M/s.S. Rathinam Rough Stone Quarry, Project consultant,

workers and the public who participated in the public hearing meeting.

In the beginning of the public hearing meeting, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Madurai explained that the press release about this public hearing was issued in both Dinathanthi(Tamil) and The New Indian Express (English) newspaper on 20/12/2023.

Sufficient publicity was made with regard to the public hearing meeting in nearby villages on 24/01/2024 using Auto rickshaw. Pamphlets were distributed to the public. Posters were pasted at prominent places. Banners were also displayed. In addition to that Environmental Impact Assessment Project Report and Executive Summary both in Tamil and English have been placed for the public viewing on Tamil Nadu Pollution Control Board website and 5 main offices in Madurai district.

As per the EIA Notification, 14.09.2006, as amended on 2009, it is necessary to conduct public hearing for grant of environmental clearance. Hence, public hearing for quarrying of ordinary stones by M/s. S.Ratnam Rough Stones quarry, S.F No. 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2I, 2K, 2L (25.01.2024) over an extent of 1.62.17 Hectare is being held today.

The District Environmental Engineer informed that public can express their views once the presentation by the representatives of the unit is over. The views of the public will only be recorded only and no decision will be arrived during this meeting. The recorded views of the public will be sent to the SEIAA, Chennai with the approval of Revenue Divisional Officer, Thirumangalam. He kindly requested the public to register only the views related to this project by mentioning their name and the name of the place clearly. Further, he said that the public can express their views verbally or in writing.

The District Environmental Engineer welcomed Revenue Divisional Officer, Thirumangalam Madurai to preside over the meeting.

**Revenue Divisional Officer, Thirumangalam, Madurai**

Greeted everyone and said that currently public hearing meeting is conducted at Kallanai Village, Kallikude Taluk. She greeted the District Environmental Engineer, Madurai, Government Department Officials, Police Officers, Journalists and public.As Thiru. S.Rathinam has applied to the quarry in the S.F No. 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2I, 2K, 2L, this public hearing is being conducted .She further asked the public to register their views.

**Technical presentation by Environmental Consultant**

The Environmental Consultant of M/s. S.Rathinam Rough Stone Quarry, S.F.No. 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2J, 2K & 2L,of Kallanai Village, Kallikudi Taluk, Madurai District briefly explained the salient aspects of the proposed project.(Copy enclosed)

**1.Thiru. B. Ganapathi, Mela Uppilikundu**

He mentioned that quarrying is their livelihood for the surroundings and all the people are based on this quarrying and asked them to cooperate in this.

**.2.Thiru. Kulasekaran, S/o.Ramasamy T. Kokkulam**

He said that we depended on agriculture. There is nothing in agriculture. Because, we have planted paddy, but no water. We all work because of the rock is there. So having the rock to work would be great for us. We couldn't get sand when we needed it. A house can be built only if there is M Sand. So, he requested that if there is rock, it will be used to build houses and for employment and livelihood.

**3.Thiru. Sundaram, Chinna Ulagani**

He said that all the people around here are increasing their livelihood only because of this quarry. Employment is available. A lot of poor people living here depend on this quarry for their livelihood. So, he humbly requested that permission should be given for this quarry.

**4.Thiru. M. Velmurugan, Periya Ulakani**

He said that he is not against opening the Quarry. But the reason for that is when the rocks are blasted, the houses here will vibrate. If a quarry is set up in the vicinity then there should be a gap of 500 meters. But everything is on the road. The lorry carrying sand from the quarry goes without any protective covering.

People are affected by this. Therefore, he expressed his opinion that if the quarry here is closed, their livelihood will be better and that they will survive by farming. This is everyone's humble request. If you express your views and requests to them, they do not give any response. When we tell them not to carryout blasting in the quarry causing loud noise, they refuse to accept our view. They make excuses that we didn't do it and but other quarries did it. Everyone knows that a pit should only be so deep but they use a borewell pit.

They say the quarry should be only this deep but who has measured it. If the pit is only 47 meters, they dig more than that. Houses shake due to explosions. He said that they don't want a quarry and that is the situation here.

**5.Thiru. C. Netaji, State Deputy General Secretary, Tamil Nadu Agriculture Protection Association, Usilampatti**

He greeted the RDO, Thirumangalam and the District environmental Engineer, Madurai. He said that there are more houses near the quarry. It is hidden in the Environmental report. We have been saying in different meeting that rocks are water reservoirs like how we

store water in the ground and in the mountains. We use to drink spring water and well water. Then we drank bore water and overhead tank water. Today we are drinking water from the water tankers at ten rupees per bottle and we have been put in such a miserable condition. The reason for this is due to such sand quarries, because the water level in the land has gone down very fast. if it rains somewhere only there will be water. The water comes only when it rains in the Western Ghats.

Gundar is in that route. Geologists said that due to the presence of quarries in this area, the earth has come down by one centimeter in the eastern direction. The reason for this is that America and India quarry the most. The report says that it is because of them this is happening. Almost not even one stone quarry is following rules in Tamil Nadu. He said that there is a large amount of illegal quarrying of rocks and that is why the Supreme Court has ordered drones to measure the depth of each quarries. All the old quarries have been ordered to be measured. This is because all the quarries are violating the law, the High Court has said this. As per section 36(1) of the Minor Mineral Concession Act 1959, there is a rule that quarrying should be carried out at a distance of 300 meters from housing plots approved by Panchayat and DTCP, permanent constructions like Oor Natham, temple, Government houses and green houses.

Minor Mineral Concession Rule 1959 36(1) (a) Government rule criteria says that houses, plots of land and permanent constructions should be at a distance of 300 meters i.e. 1000 feet from the outer edge of the quarry. The approved houses near the quarry has been hidden in the FMB. It is also a Government rule that houses indicated on village maps and field maps in revenue documents even in damaged and dilapidated condition should be treated as houses. The reason is that a house can be built at that place anytime. According to the revenue department documents, it is also called a empty house. Because, the land classification is defined as a house it cannot be taken into any category. It includes all the houses indicated on the village map and field map, such as unbuilt house, barren unbuilt house, asbestos house, farm house and garden road. All these are clarified in revenue department documents. According to the revenue order, even houses at a distance of 300 meters that have been purchased and brought under the control of the stones quarry owners are also approved houses.

Also, even if the householders within 300 meters from the stone quarry give a letter saying that they have no objection to the operation of the stone quarry, it will not be legally valid. There is no such order. There is no minor mineral concession rule and no ordinance or Government rule, so no exception is given. As there are many houses around the quarry no permission can be given for the quarry. A gap of 35 feet or 10 meters should be given on either side of the stream while quarrying. There is a clear order in Revenue Land Ordinance 26/15 and court order to a gap of 35 feet or 10 meters on either side of the stream even if the stream is in the patta land. According to Section 31 of the Minor Mineral Concession Rules, 1959, it is clearly stated that quarrying should be carried out at a distance of 50 meters from water bodies such as Odai, Oruni, Vaikkal and Kuttai.

Inside Rathinam Quarry on south side S.F.Nos 84/2L, 84/2E2, 84/2D2A, 84/2C2, there is a stream. Even though the stream is in patta, it is Government stream which is shown in field map, village map and google map. But this is hidden in Village Administrative Officer certificate, Tahsildar and RDO's Inspection Report. Also a stream in S.F.No.84/21, 84/2E2, 84/2D2A 84/2C2 has been hidden in mine plan. Rathinam quarry has not given 50 meters or 175 feet gap, so permission cannot be given. According to the Gundaru Minor Mineral Concession Rule 1959 36, the Government rule criteria clearly state that quarrying should be carried out at a distance of 50 meters from water bodies such as River, Oruni, Stream, Channel and pond. Gundar flows in S.F No. 85 at a distance of 50 meters west of Rathinam Quarry. This is shown in field map, village map and in google maps. But, in the Village Administrative Officer Certificate, Tahsildar and RDO Field Report, it is not mentioned. Gundar is flowing in S.F number 85 in the mining plan. It is said that permission may be given for Rathinam quarry as Gundar is at 50 meters distance.

Hence permission should not be given. Even before getting permission they have illegally mined gravel in Gundar basin, this is in the google map published by the unit. Therefore,permission should not be given for Rathinam stone quarry which violates the rules. If there is a pedestrian carriageway and Government porampokku land, the stone quarry should be operated by leaving a distance of 35 feet on both sides of the road and the land. Whether the

pedestrian carriageway leading to town is a walking path or vehicle path, it shold be taken as Government path according to Revenue orders and High Court orders.

According to the Minor Mineral Concession Rule 1959 36, if there is a road or Government porampokku land, the Government rule criteria is clear that 10 meters or 35 feet space should be left on both sides of the road and the land. But within Rathinam stone quarry itself the footpath runs through S.F. No. 84/2E2, 84/2D1, 84/2E1. This footpath in S.F.No. 81 leads to Chinna Ulgani as shown in FMB. There is a court order that even if the footpath is on the Patta land, it is a Government path used for public use. But, it is hidden in the mining plan. No permission should be given to Rathinam stone quarrying which does not leave 10 meters distance from the footpath. It is clearly stated in the Government rule criteria that a gap of 10 meters should be left from the outer edge of the adjacent stone quarry. On the north side of Rathinam Quarry, stones have been quarried without gap in S.F. No. 84. The satellite Google image is shown in the EIA report. Therefore, as the outer edge of the adjacent stone quarry is not 10 meters apart, legally permission cannot be given to Rathinam stone quarry.

If there are water bodies like Kanmai, Check Dam within 500 meters around the stone quarry there are court orders that quarries should not be set up within 50 meters from water bodies like Kanmai, Check Dam. But for Rathnam stone quarry, there is a huge Kallani Kanmai at 170 meters in S.F.No 42 and Gundar kanmai at a distance of 50 m in S.F.no 42 which has been mentioned in field maps and village maps. Therefore, permission should not be given to the quarry. It is not possible to give permission to the stone quarry. When quarrying is done upto a depth of 175 feet or 47 meters water from the nearby Kanmai lake ponds will come to the stone quarry. Due to this, agriculture will be destroyed and it will turn into a desert. Therefore, permission should not be given to Rathinam stone quarry. If quarrying is done in rivers and kanmais, there is a possibility to kanmai to break and water to come to town, so permission should not be given. Residences and other buildings around the quarry should be 300 meters away from the outer edge of the quarry.

But, there are houses at 120m and 190m in the north east direction and at 260m in the west direction. Rathinam Quarry is not like that. Therefore, permission should not be given

for Rathinam Quarry. There are Government porampokku lands in S.F. Nos. 84/4, 82/1 in eastern direction in the area around the quarry. The Government rule criteria is clear that there should be a gap of 10 meters for the porampokku lands around the Stone quarry. In S. F.No. 84/4 on the north side of Rathnam Quarry quarrying has been done without leaving 10 meters gap from Government porampokku Lands which is already clearly shown in the Satellite Google Maps EIA report. To the east of Rathnam Quarry mining has been done in S.F.No 82/2 Government porampokku Lands. This is already clearly shown in satellite google map EIA report. Government porampokku Lands have been mined for minerals without 10 meter intervals.

Therefore, permission should not be given for Rathinam quarry. According to Section 36 of the Minor Minerals Act 1959, quarrying should be done at a distance of 500m from water intake structures and overead tanks. A motor room at a distance of 255 meters on the west side of Rathinam Stone quarry is shown on page 2-10 of the EIA English Detailed Report. There is a pumping station nearby . As there is a motor room and a water pumping station at a distance of 255 meters no permission for quarrying shall be allowed. Rare species of deer is present In Kallikudi areas. When the quarries are excavated and blasted, where will the deer and wild boars go. There is a lot of wild boar problems here. Due to blasting, they come to porampokku lands, ponds,streams and kanmais. This affects agricultural lands. Wild animal species are also vulnerable to extinction. This is because explosions cause miscarriage.

They don't use Nanal explosives. They detonate extremely loud explosions. So far, no quarries have been detonated with low-noise explosives according to the study conducted at the public hearing. The High Court itself has declared the use of excessive explosives in the investigation. The same violation is going on in Pudukottai, Tirupur and Vedasandur areas. They have already dug and created more pits. After finishing quarrying the pits must be covered. As a result, someone will fall into it and die. There is no such situation here. there are no green fences and barbed fences and no quarry is protected, So,he said that permission for this quarry should be denied and permission should not be granted,

**6.Thiru.Bose, Ulagani:**

He said that someone said he was speaking from the Farmers' Union. All here are farmers. So far, no one knows if anyone has stood up for any farmer and if they have helped the farmers when agriculture has been affected. So, it seems that they are working with some motive to take away the employment of everyone here. Therefore, due to the presence of this quarry, there will be more jobs for all the people here. Many families depend on this for their livelihood. Therefore, he requested permission for this quarry.

**7.Thiru.Karamani, President of Agriculture Protection Association, Madurai:**

He greeted the farmers who is feeding the whole world and the officials. He said that people here are working in this Stone quarry, but only Hindi workers are working here. Not even a single person from nearby locality is working here. During British rule, they took away all the diamonds and kept them in London. Now, the Government has come which is watching what immovable properties are there. If people go to dig sand to build a house, they ban it if they dig too much. If they want to use stones for the foundation, the Government also bans quarrying of stones. They take sand and stones from the quarries and started selling them. They banned sand mining, since poor people might built houses using the sand.

But here every farmer can't do agriculture anymore. They are quarrying on one side and on the other side they have banned the sand. All the water in the river is flowing. They are installing panels in the land, in the name of solar panels on one side. They are taking the agriculture land and retaining it in the name of wind mills. Agricultural lands are being taken by companies like on the other side car. There are coasts in 15 states of our country but only TamilNadu has sold the coast for Nuclear reactors. No other have done it. When proposal was made to set up nuclear reactor with capacity 244KW at Kavai,Karnataka, they have declined it. But here they are selling it to Hyundai company, they are setting up a solar company, they are not allowing mining of sand. There were 600 brick kilns near the place called Balakombai near Aundipatti.

On seeing people taking soil they have said that from now on only, we will give soil and we have to stop all the brick kilns. From now on, we can only see the bricks and buy them in dreams. They are say that we shall give M sand and ask us to grind, make bricks and build buildings with it. The Government is cheating in many ways by saying that it will provide M sand. If you are the farmers, believe that they will give you work, if you let them to carryout quarrying in one place, every place will turn into pits. Nobody can farm in the country. Someone said that no association has helped the farmers so far. Only with the help of agricultural associations, you were able to have free motors. Only agricultural associations are fighting. No one comes forward to join the agricultural association. In order to give permission to stone quarry, 47 type of documents are mandatory.

There are 10 quarries nearby. No one knows out of 47 types of documents how many documents have been obtained by the authorities bought before giving permission to the quarries. 47 types of documents are required for ten quarries. Have you obtain those documents from anyone? They say that there should be minimum of 500m gap between the quarry and the nearby villages. It is one of the important document in the 47 type of documents Those who are proposing stone quarry should furnish those documents to the authorities in full shape and only if those documents are in proper condition, license should be given to the quarry. This Rathinam stone quarry does not have that qualification.

This is near the town and is affecting the agricultural land. Because of the dust that emerges due to blasting of rocks, the nearby agricultural lands are destroyed. Farmers are also affected and can only commit suicide. If every land is captured, where will the farmers survive? Since there is no employment , people from Delhi, Jharkhand and Uttarakhand have come here. They have got employment oppurtunities. These people have ruined the farmers jobs as by working for 200 rupees when our farmers here are working for 500 rupees. But the same situation can happen to everyone. Government officials earning salary and we are not blaming. But the Government officials should have humanity and act like Thiru Sahayam and ban the quarry like him. The Government officials can say that it is not possible to give permission to stone quarry by examining the 47 type of documents.

Problems may arise but they have to deal with it. The Government is exploiting the agriculture in many ways. If this situation continues, these people will join them tomorrow and there is a chance of a huge protest in the world. He said that they will not.

**8.Thiru. Vinodkumar, Kokkulam village, Chinna Ulagani:**

He said that they depend on this quarry. This quarry has benefited us so much. He said that there is no objection due to the existence of this quarry.

**9. Thiru.Gurunathan, Ulagani**:

He said that they are not affected by this quarry. The burial grounds of the china Ulagani used look different. Since this quarry comes near it, they have cleared the area around it. We have got lot of good things by the quarry since they help us to built temples and ponds. Someone has provoked everyone in the wrong way and everyone is saying differently. There is no problem for our village and the surrounding villages. We have got everything.

**10. Thiru.Kaveri, Chinna Ulagani:**

He said that due to the presence of this rock, they are getting a lot of job opportunities and he said that they have not faced any problem due to this.

**11. Tmt. Muthu, Ulagani:**

He said that the presence of this quarry is helpful for children to study and get employment, so they need the quarry. He requested for permission to be given to the quarry.

**12.Tmt.Meenakshi, Ulagani**

She said that this quarry once helped them and gave them work. At present everyone is going to say that mason work. But at one time quarry job was there at 200 rupees depending on this rock.

**District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai**

The District Environmental Engineer thanked respected Revenue Divisional Officer, Thirumangalam for presiding over the public hearing meeting and thanked all the Government officials, police officers, press friends, social activists and public on behalf of the Tamil Nadu Pollution Control Board.

The meeting came to an end

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Madurai

Revenue Divisional Officer
Thirumangalam,
Madurai

**Enclosures:**

1. Copy of Press release (Public Notice published in Tamil & English) for notifying the Public Hearing meeting.
2. Copy of attendance sheet of the Public Hearing ( Total Pages 8 & 59 Persons)
3. Copy of Audio & Video (DVD-Disc) of the Public hearing proceedings.
4. Written testimonies submitted by the Public.

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டம், கல்லணை கிராமம், புல எண். 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2J, 2K & 2L,தி/ள்.எஸ். ரத்தினம் சாதாரண கற்கள் குவாரி திட்ட பணிகளுக்கு பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் 25/01/2024 அன்று காலை 11.00 மணியளவில் தி/ள்.பொது விநாயகா மஹால், உலகாணி, கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரங்கள்.

<u>பங்கேற்றோர்</u>

<u>திருவாளர்கள்</u>

| | | |
|---|---|---|
| 1. | மு. சாந்தி | வருவாய் கோட்டாட்சியர்<br>திருமங்கலம்<br>மதுரை மாவட்டம் |
| 2. | முனைவர்.இரா. குணசேகரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 3. | ம. தேவகிருபை | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 4. | ச.ஜீசஸ் சிவசங்கர் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 5. | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டில் உள்ளபடி (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) |

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை</u>

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திட வருகை புரிந்திருக்கும் மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், மதுரை அவர்களுக்கு தன் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்திருக்கும் வருவாய் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், தி/ள். எஸ். ரத்தினம் சாதாரண கற்கள் குவாரி நிறுவனத்தின் உரிமையாளர், பிரதிநிதிகள், பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

இத்திட்டத்திற்கான செய்தி வெளியீடு 20.12.2023 அன்று தினத்தந்தி மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. பொது மக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டம் சம்பந்தமாக, ஆட்டோ ரிக்.ஷா மூலம் அருகாமையில் உள்ள கிராமங்களில் 24.01.2024 அன்று பரப்புரை செய்யப்பட்டது. மேலும், துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது. சுவரொட்டிகள் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டது. பேனர் வைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளத்திலும், மதுரை மாவட்டத்தில் 5 முக்கிய அலுவலகங்களிலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திட்ட அறிக்கை மற்றும் விவர அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம், புது தில்லி, 14.09.2006 அன்று வெளியிட்ட மற்றும் 2009 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின்படி சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெற வேண்டியது அவசியமானது என்பதால் தி/ள். எஸ். ரத்தினம் சாதாரண கற்கள் குவாரி 1.62.17 ஹெக்டேர் நிலப்பரப்பில் புல எண்: 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2I, 2K, 2L கல்லணை கிராமம், கள்ளிக்குடி வட்டம், மதுரை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. சாதாரண கற்கள் எடுப்பதற்கு பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது என கூறினார்.

நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்த பின் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம். தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டார்.

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் சொல்லி இத்திட்டம் சம்பந்தப்பட்ட கருத்துக்களை மட்டும் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார். பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து வடிவிலோ தெரியப்படுத்தலாம் என கூறினார்.

மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொண்டார்.

<u>வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம்.</u>

அனைவருக்கும் வணக்கம், கள்ளிக்குடி வட்டம், கல்லணை கிராமத்தில் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு தலைமையேற்று நடத்திக்கொடுக்கும் மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர் மற்றும் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தி/ள். எஸ். ரத்தினம் சாதாரண கற்கள் குவாரி 1.62.17 ஹெக்டேர் நிலப்பரப்பில் புல எண்: 84/2C1, 2D1, 2E1, 2C2, 2D2A, 2E2, 2I, 2K, 2L கல்லணை கிராமம், கள்ளிக்குடி வட்டம், மதுரை மாவட்டம் கல் உடைக்க அனுமதி கேட்டு மனு கொடுத்ததால் பொதுமக்கள் மேலான கருத்துகளை தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

<u>தொழில் நுட்ப விளக்கம், சுற்றுச்சூழல் ஆலோசகர்</u>

சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள். எஸ். ரத்தினம் சாதாரண கற்கள் குவாரி திட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

<u>1. திரு. கணபதி ,மேல உப்பிலிகுண்டு,</u>

இந்த சுற்றுச்சூழல் அமைப்பிற்கு கல் உடைப்பு என்பது தான் தங்களது வாழ்வாதாரம் என்றும் இந்த கல்லுடைப்பை வைத்து தான் மக்கள் அனைவரும் இருக்கிறார்கள் இதற்கு ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

<u>2. திரு. குலசேகரன், இராமசாமி மகன்T. கொக்குளம்</u>

நாங்கள் விவசாயங்களை நம்பியும் இருந்தோம். விவசாயத்தில் ஒன்றுமே இல்லை. ஏனென்றால் நெல் போட்டிருக்கிறோம் ஆனால் தண்ணீர் இல்லை. பாறை இருக்கிறதால், நாங்கள் எல்லோரும் வேலை செய்கிறோம். எனவே வேலை செய்வதற்கு பாறை இருந்தால், எங்களுடைய பயன்பாட்டிற்கு நன்றாக இருக்கும். எங்களுக்கு மணல் அள்ளுவதற்கு வேண்டிய காலங்களில் மணல் அள்ள முடியவில்லை. எம் சாண்ட் இருந்தால்தான் வீடு கட்ட முடிகிறது. அதனால் பாறை இருந்தால் எங்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு வீடு கட்ட பயன்படும் என்று கேட்டுக் கொண்டார்.

3. திரு. சுந்தரம், சின்ன உலகாணி:

இந்த குவாரியை வைத்துக்கொண்டு தான் இங்கு சுற்றுப்புறத்தில் உள்ள மக்கள் எல்லோருமே வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இங்கே இருக்கும் நிறைய ஏழ்மையான மக்களின் வாழ்வாதாரம் இந்த குவாரியை வைத்து தான் வாழ்கிறார்கள். அதனால் இந்த குவாரிக்கு கண்டிப்பாக அனுமதி வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

4. திரு. மு. வேல்முருகன், பெரிய உலகாணி

குவாரி வர வேண்டாம் என்று தாங்கள் தடுக்கவில்லை என்றார். ஆனால், அதற்கு என்ன காரணம் என்றால், பாறைகளில் வெடி வைக்கும் பொழுது இங்குள்ள வீடுகளே அதிர்கின்றன. சுற்றுப்புறத்தில் ஒரு குவாரி அமைக்கிறார்கள் என்றால் 500 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். ஆனால் அனைத்தும் ரோட்டின் மீது தான் உள்ளது. குவாரியிலிருந்து மண்ணள்ளி கொண்டு செல்லும் லாரி மீது எந்த ஒரு பாதுகாப்பான துணியும் பொருத்தப்படாமல் செல்கிறது.

மக்களுக்கு இதனால் பாதிப்பாக தான் உள்ளது. அதனால் இங்குள்ள குவாரியை மூடினாலே தங்களது வாழ்வாதாரம் சிறந்ததாக அமையும் என்றும், விவசாயம் செய்தாவது பிழைத்துக் கொள்வோம் என்றும், இதுதான் அனைவரது தாழ்மையான வேண்டுகோள் என்று தனது கருத்தை தெரிவித்தார். இவ்வாறு தங்களது கருத்துக்களை கோரிக்கைகளை அவர்களிடம் தெரிவித்தால், எந்த ஒரு பதிலும் அளிப்பதில்லை. இப்படி குவாரியில் அதிக சத்தத்துடன் வெடி போடாதீர்கள் என்று சொன்னால் தங்களது கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்றும், நாங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றும், வேறு குவாரிகாரர்கள் தான் செய்தார்கள் என்றும், சாக்கு போக்கு சொல்கிறார்கள். ஒரு குழி இவ்வளவு தான் இருக்க வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆனால், இவர்கள் போர்க்குழியை உபயோகப்படுத்துகிறார்கள். குவாரி இவ்வளவு ஆழம் தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்களே, அதை யார் அளந்து பார்த்தது என்று வினாவினார். பள்ளம் 47 மீட்டர் தான் என்றால், அதைவிட அதிகமாக தான் பள்ளமாக்குகிறார்கள். வெடி வெடிப்பதனால் வீடுகள் அதிருகின்றன. அதனால் தங்களுக்கு குவாரி வேண்டாம். இங்கு உள்ள சூழ்நிலை இது தான் என்று கூறினார்.

**5. திரு. C. நேதாஜி, தமிழக விவசாய பாதுகாப்பு சங்கத்தின் மாநில துணை பொதுச்செயலாளர், உசிலம்பட்டி**

குவாரிகளுக்கு அருகில் வீடுகள் அதிகமாக இருக்கின்றன. அது சுற்றறிக்கையில் மறைக்கப்பட்டு உள்ளது. தாங்களும் பல்வேறு கருத்து கேட்டு கூட்டத்தில் சொல்லி வருவதாகவும், பாறைகள் என்பது நீர் தேக்கிகள் நாம் எவ்வாறு கண்மாய் கட்டி வைத்து நீரை தேக்குகிறோமோ அது போன்ற பூமிக்குள்ளும் மலைகளுக்குள்ளும் இருக்கும் பாறைகள் நீரை சேமித்து வைக்கக்கூடிய ஒரு இடம் அந்த நீர் சேமித்து வைக்கக்கூடிய இடங்களை உடைத்ததால் தான் நாம் ஓடைகளில் ஊற்றுத் தண்ணியை குடித்துக் கொண்டிருந்தோம் கிணற்றுத் தண்ணியை குடித்துக் கொண்டிருந்தோம் ஓவர் டேங்க் என்று சொல்லி போர் போட்டு கொடுத்தார்கள் இன்று வாட்டர் டேங்க் என்று வரும் லாரிகளில் குடத்திற்கு பத்து ரூபாய் என்று நீர் வாங்கி குடித்துக் கொண்டு இருக்கிறோம்.

இப்படி ஒரு அவல நிலைக்கு மாற்றப்பட்டு அதற்கு காரணம் இது போன்ற மண் குவாரிகளால் தான் ஏனென்றால் நிலத்தில் நீர்மட்டம் வெகு வேகமாக கீழே இறங்கி விட்டது. எங்கேயோ மழை பெய்து வந்தால்தான் இங்கு தண்ணீர். மேற்கு தொடர்ச்சி மலைகளில் மழை பெய்த வந்தால் தான் இங்கு தண்ணீர். இதன் வழியிலேயே குண்டாறு இருக்கிறது. இந்தப் பகுதியில் குவாரிகள் இருப்பதால் பூமி கிழக்கு பகுதியில் ஒரு சென்டிமீட்டர் இறங்கியுள்ளது. என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்கு காரணம் அமெரிக்காவும், இந்தியாவும் தான் பூமியை அதிகமாக குடைகிறார்கள். அவர்களால்தான் இவ்வாறு ஏற்பட்டு இருக்கிறது என்று அறிக்கை சொல்கிறது. ஏற்கனவே, தமிழகத்தில் உள்ள கல் குவாரிகளில் கிட்டத்தட்ட ஒரு கல் குவாரி கூட ஒரு சதவிகிதம். கூட சட்ட விதிமுறைக்கு உட்பட்டு செயல்படவில்லை. சட்டத்திற்கு புறம்பாக அதிக அளவு பாறைகளை சுரண்டி இருப்பதாகவும் அதனால் ஒவ்வொரு கல்குவாரிகளிலும் உச்ச நீதிமன்றம் எவ்வளவு ஆழம் இருக்கிறது என்று ட்ரோன் விட்டு அளந்து பார்க்க சொல்லி இருப்பதாகவும் தெரிவித்தார். பழைய குவாரிகள் அனைத்திலும் அளந்து பார்க்கச் சொல்லி இருக்கிறது. ஏனென்றால் அனைத்து குவாரிகளும் விதிமீறல் நடந்து கொண்டிருக்கிறது சட்டப்படியாக உயர் நீதிமன்றமே சொல்லி இருக்கிறது.

சிறு கனிம சலுகை விதி 1959 பிரிவு 36(1)ன் படி அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள் ஊராட்சி மற்றும் DTCP ஆல் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், ஊர் நத்தம் கோவில் போன்ற நிரந்தர கட்டுமானங்கள் மற்றும் அரசின் தொகுப்பு வீடுகள் , பசுமை வீடுகள் இருந்தால் 300 மீட்டர் இடைவெளி விட்டு தான் குவாரி பணி செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. அதாவது சிறு கனிம சலுகை விதி 1959 36(1) (a) வீடு வீட்டு மனைகள் நிரந்தர கட்டுமானங்கள் ஆகியவை குவாரியின் வெளிமுனை பகுதியிலிருந்து எல்லைக்கல் 300 மீட்டர் அதாவது 1000 அடி இடைவெளி விட்டு குவாரி செய்ய வேண்டும் என்று அரசு விதி criteria சொல்கிறது.

மேலும் வருவாய்த்துறை ஆவணங்களில் கிராம வரைபடங்கள் மற்றும் புல வரைபடங்களில் சுட்டிக்காட்டப்பட்ட வீடுகள் மற்றும் சேதமடைந்த சிதிலமடைந்த வீடுகள் இருந்தாலும் அது வீட்டுமனையாக கருதப்பட வேண்டும் என்பது அரசு விதி. காரணம் எப்பொழுது வேண்டுமானாலும் அந்த இடத்தில் வீடு கட்டலாம் வருவாய் துறை ஆவண அடிப்படையில் மொட்டு வீடு என்றும் சொல்லப்படுகிறது நில வகைப்பாடு வீடு என வரையறுக்கப்பட்டுள்ளதால் மாறாக அதனை எந்த பிரிவிலும் கொண்டு போய் சேர்க்க முடியாது. கிராம வரைபடம் மற்றும் புலவரைபடம் ஆகியவற்றில் சுட்டி காட்டப்பட்டுள்ள வீடுகள் கட்டிடம் இல்லாத ஓட்டு வீடுகள், தரிசு கட்டிடம் இல்லாத ஓட்டு வீடுகள், ஆஸ்பெட்டாஸ் வீடுகள், பண்ணை வீடுகள், தோட்டத்துச் சாலைகள் என அனைத்து வீடுகளும் இதற்குள் அடங்கும். இவை அனைத்தும் வருவாய் துறை ஆவணங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

வருவாய்த்துறை ஆணையின்படி, 300 மீட்டர் இடைவெளியில் சுட்டிக்காட்டப்பட்ட வீடுகளை கல்குவாரி உரிமையாளர்கள் வாங்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், அதுவும் அங்கீகரிக்கப்பட்ட வீடுதான். மேலும், கல்குவாரி அமைக்க எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கல்குவாரியில் இருந்து 300 மீட்டர் சுற்றளவில் உள்ள வீட்டுக்காரர்கள் கடிதம் கொடுத்தாலும், அது சட்டப்படி செல்லாது. இப்படி எவ்வித ஒரு அரசாணையும் இல்லை. சிறு கனிம சலுகை விதியும், அரசாணையோ, அரசு விதியோ கிடையாது. இவ்வாறு விதிவிலக்கு எதுவும் கூறவில்லை. குவாரியை சுற்றி பல வீடுகள் சுற்றளவுக்குள் உள்ளது.

எனவே, கல்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது தர முடியாது. ஓடைக்கு இருபுறமும் 35 அடி 10 மீட்டர் இடைவெளி விட்டு தான் கல்குவாரி பணி செய்ய

வேண்டும் பட்டா நிலத்திற்குள் செல்லும் ஓடையாக இருந்தாலும், நிலவியல் ஓடை, குஸ்தி ஓடை எதுவாக இருந்தாலும், அதை அரசு ஆணை வருவாய் நில ஆணை 26/15ல் தெளிவான உத்தரவு மற்றும் நீதிமன்றம் உத்தரவு உள்ளது. அரசு விதி சிறு கனிம சலுகை விதி 1959 பிரிவு 31 படி ஓடை ஊருணி, வாய்க்கால், குட்டை போன்ற நீர் நிலைகளில் செல்வதற்கு 50 மீட்டர் இடைவெளி விட்டு குவாரி பணி செய்ய வேண்டும் என்று அரசு விதி criteria தெளிவாக கூறப்பட்டுள்ளது.

ரத்தினம் குவாரிக்கு உள்ளேயே தெற்கு புறத்தில் புல எண் 84/2L, 84/2E2, 84/2D2A,84/2C2 ஓடை இருக்கிறது. இது வருவாய் நிலைய ஆணையம் படி பட்டா நிலத்தில் இருந்தாலும், அது அரசு ஓடையாகும் இது புலவரைபடம், கிராம வரைபடம் கூகுள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆனால், இதை கிராம நிர்வாக அலுவலர் சான்று வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் புல தணிக்க அறிக்கை சான்று மறைக்கப்பட்டுள்ளது. மேலும், சுரங்க திட்டத்தில் புல எண் 84/21, 84/2E2, 84/2D2A, 84/2C2 ஓடை செல்வது மறைக்கப்பட்டு உள்ளது. 50 மீட்டர் 175 அடி இடைவெளி விடாத கல் குவாரிக்கு, ஓடைச் செல்லும் ரத்தினம் கல் குவாரிக்கு அனுமதி தர முடியாது தரக்கூடாது.

குண்டாறு சிறு கனிம சலுகை விதி 1959 36 ஒன்றின் படி ஆறு, ஊருணி, ஓடை மற்றும் வாய்க்கால் குட்டை போன்ற நீர் நிலைகளில் இருந்து செல்வதிலிருந்து 50 மீட்டர் இடைவெளி விட்டு குவாரி பணி செய்ய வேண்டுமென அரசு விதி criteria தெளிவாக கூறப்பட்டுள்ளது. ரத்தினம் குவாரிக்கு மேற்கில் 50 மீட்டர் இடைவெளியில் புல எண் 85 ல் குண்டாறு செல்கிறது. புலவரைபடம், கிராம வரைபடம், google வரைபடத்தில் கட்டப்பட்டுள்ளது இதனால் இதை கிராம நிர்வாக அலுவலர் சான்று வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் புலத் தணிக்கை அறிக்கை குறித்து எதுவுமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சுரங்கத் திட்டத்தில் புல எண் 85ல் குண்டாறு சென்று கொண்டிருக்கிறது. 50 மீட்டர் இடைவெளியில் உள்ள குண்டாற்றில் ரத்தினம் குவாரிக்கு அனுமதி தரப்படலாம் என்று இருக்கிறது அது தவிர்க்க வேண்டியது அது கொடுக்க முடியாது. இயங்கும் முன்பே சட்ட விரோதமாக குண்டாற்றில் கிராவல் மண்ணள்ளி உள்ளனர் இது நிறுவனம் வெளியிட்ட google வரைபடத்தில் ஏற்கனவே உள்ளது. எனவே விதிகளை மீறிய ரத்தினம் கல் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது.

நடைபாதை, வண்டிப்பாதை மற்றும் அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்தால் பாதைக்கும், நிலத்திற்கும் இருபுறமும் 35 அடி இடைவெளி விட்டு தான் கல்குவாரி செயல்பட வேண்டும் பட்டாளத்திற்கு செல்லும் நடைபாதை, வண்டிப்பாதை, நிலவியல் பாதையாக இருந்தாலும், குஸ்தி பாதையாக இருந்தாலும், அது அரசு பாதையாக வருவாய் நிலை ஆணையம் மற்றும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிறு கனிம சலுகை விதி 1959 36 ஒன்றின் படி இவ்வாறு நடைபாதை மற்றும் அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்தால், பாதைக்கும், நிலத்திற்கும் ,இருபுறமும் 10 மீட்டர் 35 அடி இடைவெளி விட்டு குவாரி பணி செய்ய வேண்டும் என்று அரசு விதி criteria தெளிவாக உள்ளது. ஆனால் ரத்தினம் கல்குவாரிக்கு உள்ளேயே புல எண் 84/2E2, 84/2D1, 84/2E1 ஆகியவற்றில் நடைபாதை செல்லும். இந்த பாதை நடைபாதை. இந்த புல எண் 81 லிருந்து சின்ன உலகாணிக்கு செல்லும் நடைபாதை என்பது FMB ல் காட்டப்பட்டுள்ளது. பட்டா நிலத்தில் இருக்கும் நடைப்பாதை என்றாலும் நிலவியல் பாதையாக இருந்தாலும், குஸ்தி பாதையாக இருந்தாலும், அரசு பாதை மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய நிலமாகவும் இருக்கிறது என்று நீதிமன்றம் உத்தரவு உள்ளது வருவாய்துறை நிலை ஆணை மற்றும் நீதிமன்றம் உத்தரவுப்படி அது பாதையாகும்.

ஆனால் அது சுரங்கத் திட்டத்தில் அது மறைக்கப்பட்டுள்ளது. நடைபாதைக்கு 10 மீட்டர் இடைவெளி விடாத ரத்தினம் கல் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது. கல்குவாரியை சுற்றியுள்ள அடுத்த கல் குவாரி வெளி முனை பகுதி 10 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்பது அரசு விதி criteria தெளிவாக கூறப்பட்டுள்ளது.

ரத்தினம் குவாரிக்கு வடக்கு புறமுள்ள ரத்தினம் புல எண் 84 ல் கல்குவாரியில் இடைவெளி இன்றி கற்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன செயற்கைக்கோள் கூகுள் படம் அதில் இ ஐ ஏ அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது எனவே அடுத்துள்ள கல்குவாரியின் வெளிமுனை பகுதி 10 மீட்டர் இடைவெளி இல்லாததால் ரத்தினம் கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதி தர முடியாது, தரக்கூடாது. குளங்கள், கண்மாய்கள், ஏந்தல் அணை, ஏரி, குளங்கள், கண்மாய், ஏந்தல் அணை போன்ற நீர் தேக்கும் நீர் நிலைகள் இருந்தால் 50 மீட்டர் தொலைவில் குவாரிகள் அமையக்கூடாது என்று நீதிமன்ற உத்தரவுகள் உள்ளது ஆனால் ரத்தினம் கல் குவாரிக்கு கிழக்குபுறத்தில் 170 மீட்டர் புல எண் 42ல் மிகப் பெரிய கல்லணை கண்மாய் மற்றும் புறம்போக்கு

நிலத்தில் புல எண் 42ல் 50 மீட்டர் குண்டாறு கண்மாய்கள் ஆறுகள் இருப்பதாக புலவரை படம் கிராம வரைபடம் ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளது.

எனவே, குவாரிக்கு அனுமதி தரக்கூடாது, தர முடியாது. 47 மீட்டருக்கு ஆழத்திற்கு சுமார் 175 அடி கல் குவாரி பணி செய்யும்போது கண்மாய், ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் இருந்தால், தண்ணீர் கல் குவாரிக்கு வந்துவிடும். இதனால் விவசாயம் அழிந்து பாலைவனமாக மாறும். எனவே ரத்தினம் கல் குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது . ஆறுகள் குளங்களுக்கிடையே தோண்டினால் கண்மாய் உடைய வாய்ப்புகள் இருக்கிறது. அந்த ஆறுகளின் மண் சரிந்து ஊருக்குள் செல்ல வாய்ப்பு இருக்கிறது அதனால் அனுமதி வழங்கக் கூடாது. குவாரியை சுற்றி 300 மீட்டரில் குடியிருப்பு, இதர கட்டிடங்கள் குவாரியின் வெளிமுனை பகுதியில் இருந்து எல்லைக்கல் 300 மீட்டர் ஆயிரம் அடி இடைவெளி விட்டு தான் குடி இருப்புகள் அமைக்க வேண்டும்.

ஆனால் வட கிழக்கில் 120 மீட்டர், வடகிழக்கு புறத்தில் 190 மீட்டரில், மேற்கு புறத்தில் 260 மீட்டரில், குடியிருப்புகள் அமைந்துள்ளன. எனவே, ரத்தினம் குவாரி அவ்வாறு இல்லை. எனவே, ரத்தினம் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்றும், குவாரியை சுற்றியுள்ள பகுதியில் புல எண் 84/4 கிழக்கு 82/1 ஆகியவற்றில் அரசு புறம்போக்கு நிலங்களும் உள்ளன கல்குவாரியை சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களில் 10 மீட்டர் இடைவெளி வேண்டும் என்பது அரசு விதி criteria தெளிவாக உள்ளது. ரத்தினம் குவாரிக்கு வடக்கு புறத்தில் உள்ள புல எண் 84/4 ல் அரசு புறம்போக்கு நிலங்கள் 10 மீட்டர் இடைவெளியின்றி கனிமமாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளன.

இது ஏற்கனவே செயற்கைக்கோள் கூகுள் வரைபடம் இ ஐ எ அறிக்கையில் இது தெளிவாக காட்டப்பட்டுள்ளது. ரத்தினம் குவாரிக்கு கிழக்கில் 82/2 அரசு புறம்போக்கு நிலம் உள்ளது கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.இது ஏற்கனவே செயற்கைக்கோள் கூகுள் வரைபடம் இ ஐ எ அறிக்கையில் இது தெளிவாக காட்டப்பட்டுள்ளது. அரசு புறம்போக்கு நிலங்கள் பகுதிக்கு 10 மீட்டர் இடைவெளியின்றி கனிமமாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளது இதனால் 10 மீட்டர் இடைவெளியின்றி உள்ள ரத்தினம் குவாரிக்கு சட்டப்படி அனுமதி தரமுடியாது தரக்கூடாது. கல்குவாரியை சுற்றி 500 மீட்டருக்குள் குடிநீர் எடுக்கும் நீர் ஏற்ற நிலங்கள் நீர் வழங்க ஏற்பாடு இருந்தால் அனுமதி தரக்கூடாது.

சிறு கனிம விதி 1959 பிரிவு 36 ஒன்றின் படி குடிநீர் எடுக்கும் இடங்கள், நீரேற்று நிலங்கள், நீர் வழங்கும் மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள், குடிநீர் தொட்டிகள், பாலங்கள் இருந்தால் 500 மீட்டர் இடைவெளியில் விட்டு குவாரி பணி செய்ய வேண்டும் என்று அரசு விதி கூறப்பட்டுள்ளது. ரத்தினம் கல்குவாரிக்கு மேற்கு புறத்தில் 255 மீட்டர் இடைவெளியில் மோட்டார் ரூம் இருப்பது EIA ஆங்கில விரிவான அறிக்கையில் பக்கம் 2– 10–ல் காட்டப்பட்டுள்ளது. அங்கு நீரேற்றும் நிலையம் உள்ளது. மேலும், 255 மீட்டர் இடைவெளியில் மோட்டார் ரூமும், நீரேற்று நிலம் இருப்பதால் சட்டப்படி குவாரிக்கு அனுமதி தரக்கூடாது. கள்ளிக்குடி பகுதியில் அரியவகை மான்கள் அதிகம் இருக்கின்றன.

குவாரிகளில் ஏற்கனவே தோண்டி, தோண்டி வெடிகள் வைக்கிறதனால் மான்களும் காட்டு பன்றிகளும் எங்கு போய் நிற்கும். இங்கு காட்டு பன்றிகள் தொல்லை மிகவும் அதிகம். வெடி வைப்பதனால் இவைகள் புறம் போக்கு நிலத்திலும் குளம் கண்மாய் போன்ற ஓடைகளில் நிற்கும், கண்மாய்களில் நிற்கும், ஊருணிகளில் நிற்கும், புறம்போக்கு நிலத்தில் நிற்கும். இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகிறது. காட்டு விலங்குகள் இனமும் அழியக்கூடிய பாதிப்பு உள்ளது. ஏனெனில் வெடிகள் வெடிப்பதனால் கருச்சிதைவு ஏற்படும். இவர்கள் யாரும் நாணல் வெடி வெடிப்பதில்லை. அதிகப்படியான சத்தம் உள்ள வெடிகளை வெடிக்கின்றனர்.

இதுவரை நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் செய்த ஆய்வின்படி எந்த குவாரியிலும் குறைந்த சத்தம் உள்ள வெடிகளை வெடித்ததில்லை. அளவுக்கு மீறிய வெடி மருந்துகள் பயன்படுத்துவதாக ஆய்வில் உயர்நீதிமன்றமே அறிவித்துள்ளது. புதுக்கோட்டை, திருப்பூர், வேடசந்தூர் மாவட்டத்தில் இதே விதிமீறல் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே தோண்டி அதிக பள்ளங்கள் உருவாக்கி உள்ளனர். ஒரு கல்குவாரி பள்ளங்களை தோண்டி முடித்த பிறகு அந்த பள்ளங்களை மூடி கொடுக்க வேண்டும்.

இதனால் யாராவது அதில் விழுந்து இறந்து விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையும் இங்கு இல்லை. பசுமை வேலிகளும் கிடையாது, முள் வேலிகளும் கிடையாது, பாதுகாக்கப்பட்ட குவாரியும் கிடையாது. அவ்வாறு இருப்பதனால் இந்த குவாரிக்கு அனுமதி மறுக்க வேண்டும், அனுமதி வழங்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

6. திரு. போஸ், உலகாணி

விவசாய சங்கத்திலிருந்து பேசுவதாக ஒருவர் கூறினார். இங்கு உள்ள அனைவரும் விவசாயிகள் தான். இதுவரை எந்த ஒரு விவசாயிக்காக யாரும் முன்னிலையில் நின்று பேசி இருக்கிறார்களா என்றால், எந்த விவசாயிகளுக்கும் தெரியாது இங்கு விவசாயம் பாதித்திருக்கிறது என்று விவசாயிகளுக்கு உதவி செய்து இருக்கிறார்களா என்றால், இங்குள்ள விவசாயிகளுக்கும் யாருக்கும் தெரியாது.

அதனால், இங்கு உள்ள அனைவரது வேலைவாய்ப்பையும் பறிப்பதற்காக ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு செயல்படுவதாக தெரிகிறது. எனவே இந்த குவாரி இருப்பதனால், இங்குள்ள பொதுமக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கும். இதை நம்பித்தான் இந்த வாழ்வாதாரத்தை நம்பி தான், நிறைய குடும்பங்கள் இருக்கின்றன. எனவே, இந்த குவாரிக்கு அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

7. திரு. காராமணி, விவசாய பாதுகாப்பு சங்கத் தலைவர், மதுரை

இந்த கல்குவாரியில் இங்குள்ள மக்கள் வேலை செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள் ஆனால் இங்கு ஹிந்தி காரர்கள் தான் வேலை செய்கிறார்கள் ஒரு மக்கள் கூட இங்கு வேலை செய்யவில்லை ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் வைரம், வைடூரியம் அனைத்தையும் கொண்டு போய் லண்டனில் வைத்துக் கொண்டார்கள் ஊராட்சி வந்திருக்கிறது. அசையா சொத்துக்கள் என்னென்ன இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறது. மக்கள் ஒரு வீடு கட்ட மணல் அள்ள சென்றால் அதிகமாக அள்ளுகிறார்களா என்று பார்த்து அதற்கு தடை விதிக்கிறார்கள்.

அந்த அடித்தளத்திற்கு இரண்டு கல்கள் போட வேண்டும் என்று போனால் கல் எடுப்பதற்கும், அரசு தடை விதித்து குவாரிகளிலிருந்து மணல் மற்றும் கல்களை எடுத்து அதை விற்க ஆரம்பித்து விட்டார்கள் ஏழை மக்கள் இந்த மண்ணை அள்ளி வீடு கட்டி விடுவார்கள் என்று அந்த மணலை தடை செய்து விட்டனர் ஆனால் இங்கு ஒவ்வொரு விவசாயியும் விவசாயம் இனிமேல் செய்ய முடியாது கல்குவாரியை வைத்துக்கொண்டு ஒரு பக்கம் தோண்டி கொண்டு இருக்கிறார்கள்.

மணலை ஒரு பக்கம் தடை செய்து விட்டார்கள் ஆற்றில் உள்ள நீர் அனைத்தும் ஓடிக்கொண்டிருக்கிறது. சோலார் என்று சொல்லி ஒரு பக்கம் நிலத்தை எடுத்து தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காற்று ஆலைகள் என்ற பெயரில் நிலத்தை சுரண்டி கொண்டிருக்கிறார்கள். ஹூண்டாய் கம்பெனி ஒரு பக்கம் என்றால், கார் கம்பெனி மற்றொரு பக்கம் இந்த விவசாய நிலங்களை எடுத்து கம்பெனிகளாக உருவாக்கி வருகின்றனர். இங்கு 15 மாவட்டங்களில் கடல் சந்திக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான், அணு உலைக்கு இந்தக் கடலை விற்று விட்டார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் விற்று விட்டார்கள். வேறு எந்த ஊரிலும் அணு உலை வைக்கவில்லை. கர்நாடக மாநிலத்தில் கவாய் என்ற இடத்தில் 244 கிலோ வாட் தயார் செய்ய வேண்டி இருப்பதால், அவர்கள் ஊரில் வைக்க அனுமதிக்கவில்லை. ஆனால், இங்கு ஹூண்டாய் கம்பெனிக்கு விற்கிறார்கள், சோலார் கம்பெனி வைக்கிறார்கள் கல்குவாரி வைக்கிறார்கள்.

மணல் அள்ள விடுவதில்லை. ஆண்டிபட்டி மாவட்டத்தில் பாலகோம்பை என்ற பகுதியில் அறநூறு செங்கல் காளவாசல் இருந்தது. மண்ணள்ளி கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்த்துவிட்டு இனிமேல் நாங்கள் தான் மண் கொடுப்போம் என்றும், நாம் காளவாசல் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என்றும் சொல்கிறார்கள். இனி செங்கலை கனவில் தான் பார்க்க முடியும். ஒரு செங்கல் வாங்க வேண்டுமென்றால் அதை கனவாக தான் வேண்டும் நாங்கள் எம் சாண்ட் கொடுக்கிறோம் எம் சாண்டை அரைத்துக் கொடுக்கிறோம். அதில் செங்கல் தயாரித்து, கட்டடம் கட்டுங்கள். நாங்கள் தான் எம்சாண்டு அளிப்போம் என்று சொல்லி அரசாங்கம் பல வழிகளில் மோசடி செய்து வருகிறது.

விவசாயிகளாகிய நீங்கள் வேலை கொடுப்பார்கள் என்ற நம்பி ஒரு குழியை தோண்ட விட்டால் குழி குழியாக தான் இருக்கும் நாட்டில் யாரும் விவசாயம் செய்ய முடியாது. ஒருவர் சொன்னார், விவசாயிகளுக்கு எந்த சங்கமும் இதுவரை உதவி செய்யவில்லை என்று விவசாய சங்கங்கள் இருக்க கண்டு தான் தாங்கள் இலவச மோட்டார்கள் இயக்கிக் கொண்டு இருக்கிறீர்கள். விவசாய சங்கம் தான், போராடிக் கொண்டிருக்கிறது விவசாய சங்கத்தில் சேர யாரும் முன் வருவதில்லை. ஆனால் இந்த காலகட்டத்தில் தான் இந்த நாடு இந்த நிலைமையில் போய்க்கொண்டிருக்கிறது. கல்குவாரி அமைக்க 47 வகையான ஆவணங்கள் வேண்டும். இங்கு பத்து குவாரிகள்

இருக்கிறது அதிகாரிகள் 47 வகையான ஆவணங்களில் எத்தனை ஆவணங்களை வாங்கி குவாரிகளுக்கு அனுமதி கொடுத்தார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

பத்து குவாரிகளுக்கு 47 வகையான ஆவணங்கள் வேண்டும். அந்த ஆவணங்களை யாரிடமாவது வாங்கி கொடுத்திருக்கிறீர்களா ,ஒரு கல்குவாரி வைக்கிற இடத்திற்கும் அங்குள்ள கிராமத்திற்கும் 500 மீட்டர் இடைவெளி கிட்டத்தட்ட ஒன்றரை கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். கல்குவாரிக்கும், உங்களது கிராமத்திற்கும் இடையே ஒன்றரை கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் இருக்கிறதா, ஏழு வகையான ஆவணங்களில் அதுவும் முக்கியமான ஒன்று 47 வகையான ஆவணங்களையும் முழுமையாக கல்குவாரி வைத்தவர்கள். அந்த ஆவணங்களை அங்குள்ள அதிகாரிகளிடம் ஒப்படைத்து சரியான நிலையில் அந்த ஆவணங்கள் இருந்தால்தான் குவாரிக்கு உரிமம் வழங்க வேண்டும். லைசன்ஸ் வழங்க வேண்டும் இந்த ரத்தினம் கல் குவாரிக்கு அந்த தகுதி இல்லை.

அது ஊரின் அருகில் இருக்கிறது விவசாய நிலங்களை கெடுக்கிறது பக்கத்தில் இருக்கும் ஒரு விவசாயி கத்தி நட்டு இருந்தால், இவர்கள் வேட்டு வெடித்து அதன் மூலம் வரும் தூசியினால் பயிர்கள் நாசமாகின்றன விவசாயிகளும் பாதிப்படைந்து மருந்து குடித்து தற்கொலைக்கு முயல்கின்றனர். இவ்வாறு காலப்போக்கில் ஒவ்வொரு நிலங்களையும் கைப்பற்றினால் விவசாயிகள் எங்கு சென்று பிழைப்பது டெல்லிக்காரர்கள், ஜார்கண்ட் காரர்கள், உத்தரகாண்ட் காரர்கள் அங்கு வேலை இல்லாமல் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கிறது நம் ஊரில் வந்து 200 ரூபாய்க்கு வேலை பார்க்கிறார்கள் ஆனால், நம் ஊர் விவசாயிகள் 500 ரூபாய் சம்பளம் கேட்பதால் விவசாயிகளை நிராகரித்து விட்டார்கள்.

ஆனால், இதே நிலை எல்லோருக்கும் வரலாம். அதனால் அரசு அதிகாரிகளும் சகாயம் போல் குவாரியை தடை செய்யுங்கள். இது போல் உள்ள அரசு குவாரிகளுக்கு 47 வகையான ஆவணங்கள் இருக்கிறதா என்று அதை ஆய்வு செய்து அனுமதி அளிக்க முடியுமா? முடியாதா என்று உங்களால் சொல்ல முடியும். அரசு அதிகாரிகளுக்கு எந்த ஒரு இடையூறு ஏற்பட்டாலும் அதைப் பொறுத்து தான் செய்ய வேண்டி இருக்கிறது. ஆனால் அரசாங்கம் பல வழிகளிலும் விவசாயத்தை சுரண்டி கொண்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால் இந்த மக்கள் நாளை தங்களுடன் சேர்ந்து விடுவார்கள் என்றும் மிகப்பெரிய போராட்டத்தை உலகாணியில் நடத்த வாய்ப்பு

இருப்பதாகவும், இந்த குவாரிக்கு லைசன்ஸ் கொடுத்தால் மிகப்பெரிய போராட்டம் இங்கு வெடிக்கும். கல்குவாரியை இங்கு நடத்த விட மாட்டோம் என்று கூறினார்.

8. திரு. வினோத்குமார், கொக்குளம் கிராமம், சின்ன உலகாணி

இந்த குவாரியை நம்பித்தான் நாங்கள் இருக்கிறோம். இந்த குவாரியினால் எங்களுக்கு எவ்வளவோ நன்மை நடந்து இருக்கிறது. இந்த குவாரி இருப்பதனால் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துக் கொண்டார்.

9. திரு. குருநாதன், உலகாணி

இந்த குவாரியினால் தங்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை என்றும் ,இந்த குவாரியை நம்பித்தான் தாங்கள் இருப்பதாகவும் இதனால் எந்த ஒரு ஆட்சேபனமும் இல்லை. உலகாணி மயான இடத்தை சுத்தம் பண்ணி கொடுத்து இருக்கிறார் என்றும், அதிக நன்மையே நடந்து கொண்டிருக்கிறது என்றும், இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று அரசை கேட்டுக் கொண்டார்.

10. திரு. காவேரி, சின்ன உலகாணி

இந்தப் பாறை இருப்பதனால் தங்களுக்கு வேலை வாய்ப்புகள் நிறைய கிடைக்கின்றன எனவும், இதனால் எந்த ஒரு பிரச்சனையும் தங்களுக்கு ஏற்படவில்லை என்றும் தனது கருத்தை தெரிவித்தார்.

11. திருமதி. முத்து, உலகாணி

இந்தப் பாறை இருப்பதனால் குழந்தைகளை படிக்க வைக்கவும் வேலை வாய்ப்பிற்கும் உதவிகரமாக உள்ளது எனவே எங்களுக்கு பாறை வேண்டும். பாறைக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

12. திருமதி. மீனாட்சி, உலகாணி

இந்தப் பாறை தங்களுக்கு ஒரு காலத்தில் உதவியதாகவும் வேலை செய்யவும் கொடுத்தது இந்த பாறை தான். தற்பொழுது தான், கொத்தனார் வேலை, சித்தாள் வேலை என்று அனைவரும் செல்கிறார்கள். ஆனால், ஒரு காலத்தில் இந்த பாறையை நம்பி 200 ரூபாய்க்கு கூட வேலை இருந்தது. அப்பொழுது கிடைத்தது இந்த

மண்குவாரி தான். அந்தக் கல்குவாரி எல்லா மக்களுக்கும் வேலை செய்வதற்கு வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u>

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கி கொடுத்த மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார் மற்றும் அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | வருவாய் கோட்டாட்சியர் |
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், | திருமங்கலம் |
| மதுரை | மதுரை |

இணைப்பு:

1. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 8 மற்றும் 59 நபர்கள்)
3, பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.
4. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.